மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
ஸ்ரீரங்கம்
OS.No.1219/2019

10.07.2026

**<u>DW–1 பெயர். திரு. ஜெபமாலை ராஜ் த/பெ. மைக்கேல் (வயது–79 /2026)</u>**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

எனக்கு எதிராக வாதி காவல்துறையில் புகார் கொடுத்திருந்தாரா என்றால் நான் புகார் கொடுத்தேன் அவர்களை விசாரணை செய்தார்கள் . ராம்ஜி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் . அந்த புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவர் நிலஅபகரிப்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாரா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் வாதி என்னுடைய அசல் ஆவணத்தை திருடி சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். காவல்துறை புகாரை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன் . பிரதிவாதி தரப்பு ஆவணங்களை சாட்சியிடம் காட்டி நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை கேட்டால் சாட்சி நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்கிறார் . கோட்டாட்சியருக்கு நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன் . அந்த புகாரிலும் வாதி அசல் ஆவணத்தை திருடி சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். கோட்டாட்சியருக்கு கொடுத்த புகார் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மீண்டும் சாட்சியிடம் அவரது தரப்பு ஆவணங்களைகாட்டி மேற்படி புகார் ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதா என்று கேட்டால் தாக்கல் செய்யவில்லை என்கிறார் . மாவட்ட ஆட்சித்தலைவருக்கு எழுத்துபூர்வமாக கொடுத்த புகார் பி .வா.சா.ஆ.7 ஆக குறியிடுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி பி.வா.சா.ஆ.7 ல் வாதி கிரையபத்திரத்தை திருடி சென்றதாக வாசகம் இல்லை என்றால் அசல் ஆவணத்தை ஒளித்துவைத்துள்ளதாக உள்ளது . திருடியதாக இல்லை. திருடுவது என்பவது குற்ற செயல் என்றால் சரிதான் . மேற்படி ஆவணத்தை அவர் வீட்டில் ஒளித்துவைத்திருந்தார் . மேற்படி ஆவணத்தை திருப்பி கொடுக்க சொல்லி வாதியிடமும் , அல்லது வாதியின் குடும்பத்தினருக்கு அறிவிப்பு

அனுப்பவில்லை என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை . காவல் நிலையத்தில் இன்றைய தினம் வரை வாதியோ , வாதி குடும்பத்தினரோ 1976 கிரைய அசல் ஆவணத்தை திருடி சென்றதாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . நிருபண வாக்குமூலம் நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் வழக்கறிஞர் தயார் செய்து நீதிமன்றத்தில் முதல் விசாரணை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் 1976ம் ஆண்டுக்கான கிரைய அசல் ஆவண பத்திரத்தை வாதியோ,அல்லது குடும்பத்தினரோ திருடிக்கொண்டு சென்றுவிட்டதாகவோ, அல்லது ஒளியவைத்துவிட்டதாகவோ எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை . இந்நீதின்றத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளிலும் என்னுடைய 1976 கிரைய ஆவணத்தை வாதியிடமிருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை . உயர்நீதிமன்ற மதுரைகிளையில் ரிட் மனு தாக்கல் செய்யததில் ஆஜராகி எனது தரப்பில் வழக்கறிஞரும் செய்து பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஸ்ரீரங்கம் சார்கோட்டாட்சியரிடமும் விசாரணை நடைபெற்றது அதிலும் நான் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். கோட்டாட்சியர் உத்தரவுக்க எதிராக மாவட்ட வருவாய் அலுவலரிடம் வாதி தாக்கல் செய்த மேல்முறையீட்டில் நான் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் . மேற்கண்ட விசாரணைகளிலும் நான் தாக்கல் செய்த பதிலுரைகளிலும் எந்தஇடத்திலும் எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் 1976 கிரைய அசல்வ ஆவணத்தை வாதியோ , வாதி குடும்பத்தினரோ , திருடிக்கொண்டு சென்றுவிட்டதாகவோ, அல்லது ஒளியவைத்துக்கொண்டதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான் . மேற்கண்ட அனைத்து விசாரணைகளிலும் எனது தரப்பில் வழக்கறிஞரை நியமித்து வழக்காடியுள்ளேன் என்றால் சரிதான் . என்னுடைய தந்தையார் 1997ம் வருடம் எனது பெயருக்கு பத்திர அலுவலகத்தில் எனது தந்தையரால் ஆவண எண்.1718/1997 ஆவணத்தை எனக்காக எனது தந்தையார் பத்திர அலுவலகத்தில பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படுவது அந்த பத்திரத்தின் நகல் என்றால் சரியாக தெரியவில்லை . அதன்படி அதில் கண்டுள்ள சொத்துக்களை நான் அனுபவித்து வருகிறேன் . மேற்படி என்

பெயரில் ஏற்பட்ட செட்டில் மெண்டின் சான்றிட்ட நகல் என் வீட்டில் உள்ளது . அதை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான் . என் பெயருக்கு ஏற்பட்ட செட்டில்மென்ட் ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேனா என்றால் சரிதன். பின்னர் சாட்சி என்னிடம் உள்ள நகலைதான் கொடுத்துள்ளேன் என்று சொல்கிறார் . அந்த செட்டில்மென்ட் ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் எனக்கு எனது தந்தையார் கொடுத்தார் என்றவிவரத்தை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தெரியும் என்றால் சரிதான் . இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்தை வாதி தன்னுடைய சொத்து வழக்கு தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் அ.வ.எண். 472/2019 எனது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பதில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . அந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும் எனது ஆவணங்கள் திருடுபோய்விட்டது என்றும் ஒளித்துவைத்துவிட்டர்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/–xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made is his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam